# மண்டைதீவுக் கடற்படையினருக்குக் காணி சுவீகரிப்பு பொதுமக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் போராட்டம்!

## இன்று பின்வாங்கியது நில அளவைத் திணைக்களம்





யாழ்ப்பாணம் மண்டைதீவு பகுதியில் கடற்படையினருக்கு காணி சுவீகரிப்ப தற்கான நடவடிக்கைக்கு எதிராக பொதுமக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் இன்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வேலணைப் பிரதேச செயலாளர் பிரிவின், மண்டைதீவு கிழக்கில் ஜே/07 கிராம சேவகர் பிரிவில் உள்ள, 29 பேருக்குச் சொந்தமான 18 ஏக்கருக்கும் அதிகமான தனியார் காணிகளை, வெலிசுமன கடற்படை முகாம் அமைப்பதற்காக சுவீகரிக்கும் நோக்கில், இன்று புதன்கிழமை அளவீட்டுப் பணிகளை ஆரம்பிக் கப்போவதாக நில அளவைத் திணைக்களத்தினரால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டிருந்தது

இவ் அளவீட்டுப் பணிகளை தடுத்து நிறுத்துவதற்காக மக்கள் பிரதிநிதிகள், காணி உரிமையாளர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் மண்டைதீவு கிழக்கு முத்துமாரியம்மன் ஆலயத்திற்கு அருகில் இன்று புதன்கிழமை 2▶

மாலைக்கதிர்
Maalaikkathir
சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 27 புதன்கிழமை 12.07.2023 கதிர் 25

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV YouTube தளம்

# மண்டைதீவில் 60க்கும் மேற்பட்ட இளைஞர்கள் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டு வீசப்பட்டனர்

## இன்றைய போராட்டத்தில் சிறிதரன் எம்.பி.



யாழ்ப்பாணம் மண்டைதீவுப் பகுதியில் 1990 ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப் பட்ட 40 ஏக்கருக்கும் மேற்பட்ட பொது மக்களின் காணி களை விடுவிக்குமாறு கோரி யாழில் இன்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மண்டைதீவில் கடற்படையினர் ஆக்கிரமித்துள்ள தனியாரின் காணிகள் மிகவும் வளம் மிக்க தோட்டக் காணிகள் என்பதோடு, குடிநீருக்குப் பயன்படுத்தக்கூடிய நல்ல தண்ணீரைக்கொண்ட பகுதியாகவும் 2▶

# ஒரே நாளில் யானை தாக்கி யுவதி உட்பட மூவர் மரணம்!

வெவ்வேறு இடங்களில் காட்டு யானைகள் தாக்கி யுவதி ஒருவர் உட்பட மூவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர். இந்த மூன்று மரணங்களும் நேற்று பதிவாகியுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலனறுவை - இலங்காபுரம் பிரதேசத்தில் நேற்று மாலை காட்டு யானை தாக்கி 27 வயதுடைய யுவதி ஒருவர் சாவடைந்துள்ளார். குறித்த யுவதி தாயாருடன் வயல் வெளிக்குச் சென்ற போது காட்டு யானை தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். அவருடன் ஒன்றாகச் சென்ற தாய், படுகாயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மொனராகலை - புத்தல பிரதேசத்தில் நேற்றிரவு காட்டு யானை தாக்கி 54 வயதுடைய ஆண் ஒருவர் சாவடைந்துள்ளார். மோட்டார் சைக்கிளில் பயணித்த குறித்த நபரை வீதியைக் கடந்து சென்ற யானைகளில் ஒன்று தாக்கியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

அனுராதபுரம் - கஹடகஸ்திகிலிய பிரதேசத்தில் நேற்றுப் பகல் காட்டு யானை தாக்கி 33 வயதுடைய ஆண் ஒருவர் சாவடைந்துள்ளார். குறித்த நபர், மாடு மேய்ப்பதற்காக அப்பகுதியிலுள்ள குளத்துக்குச் சென்ற போது யானை தாக்கியுள்ளது எனவும், அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் எனவும் பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

# சந்திரிகாவை மீளவும் சுதந்திரக் கட்சியில் இணைக்கத் திரைமறைவில் நடவடிக்கை!

வீழ்ந்து கிடக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைக் கட்டியெழுப்பு வதற்குச் சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க மீண்டும் கட்சியில் இணைய வேண்டும், என்று கட்சியின் முக்கியஸ்தர்கள் கருதுவதால் அதற்கான நகர்வில் அவர்கள் ஈடுபட்டுள்ளார்கள் என்று அறியமுடிகின்றது.

முதலில் சந்திரிகாவுக்கும் சுதந் திரக் கட்சியின் தலைவர் மைத் திரிக்கும் இடையில் இருக்கின்ற மனக்கசப்பை நீக்க வேண்டும். அது நடந்தால்தான் சந்திரிக்காவை மீண்டும் கட்சியில் இணைப்பது சாத்தியம். இதனால், 2▶



# மக்கள் ஆணை எமக்கே உண்டு 13ஐ மட்டும் கோர முடியாது!

## இரா.சம்பந்தன் திட்டவட்டம்

“தமிழ் மக்களின் ஆணை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்குத்தான் உள்ளது. அதனை நாம் மீற முடியாது. 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு மட்டும் நாம் இந்தியாவிடம் கோர முடியாது!” - இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியினதும் அக்கட்சியின் நாடாளுமன்றக் குழுவினதும் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இரா.சம்பந்தனுக்கும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனுக்கும் இடையில் நேற்றுச் சந்திப்பு ஒன்று 2▶

# முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுப்பு!

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் பகுதியில் அண்மையில் கண்டு பிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழி அகழ்வு, சர்வதேச நியமங்களுக்கு அமைய மேற் கொள்ளப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி இன்று காலை முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் இந்த போராட் டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, மனிதப் புதைகுழி அகழ்வு நடவடிக் கைகளில் சர்வதேச கண்காணிப்பாளர்கள் அல்லது சர்வதேச நிபுணத்துவம் பெற்றவர்களை கொண்டு சர்வதேச நியமங்களுக்கு அமைய இந்த அகழ்வு பணி இடம்பெற வேண்டும் என 2▶



- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

இலங்கையிலிருந்து வெளிவரும் ஒரேயொரு மாலை இதழ்

## நூற்றியிருபதாவது ஆண்டில் பிரவேசிக்கும் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரியின் பழையமாணவர் தென்னிலங்கைச்சங்கம்

1823 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்ட யாழ்ப்பாணம் பரி.யோவான் கல்லூரி, இந்த 2023 ஆம் ஆண்டில் இருநூறு வருட நிறைவைக் கண்டிருக்கின்றது.

உலகெங்கும் பரந்து வாழ்கின்ற பழைய மாணவர்களும் கல்லூரிச் சமூகத்தினரும் இதனை உணர்வு பூர்வமாகவும் விமர்சையாகவும் கொண்டாடிக்கொண்டிருக்கின்றார்கள்.

இந்த லையில், 1904 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட, கல்லூரியின் பழைய மாணவர் சங்க தென்னிலங்கைக் கிளையும் நூற்றியிருபது வருடங்கள் என்ற மிக முக்கியமான எல்லைக்குள் 2023 ஆம் ஆண்டு பிரவேசிக்கின்றது.

சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் 29 ஆம் திகதி சனிக்கிழமை, வெள்ளவத்தை சென்.லோறன்ஸ் வீதியில் அமைந்துள்ள ஹோளி ரினிற்றி தேவாலய மண்டபத்தில் மாலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளதுடன், அன்றைய கூட்டத்தில் 120 ஆவது ஆண்டுக்கான (2023/24 )நிர்வாகக் குழுத் தெரிவும் நடைபெறும் எனத் தற்போதைய நிர்வாகம் தெரிவிக்கின்றது.

## 13 ஆம் திருத்தத்தினை தீர்வாக ஏற்றுக் கொள்ளமுடியாது அரசியல் ஆய்வாளரும் சட்டத் தரணியுமான ஜோதிலிங்கம்



13 ஆம் திருத்தத்தினை தீர்வாக ஏற்றுக் கொள்ளமுடியாது, என அரசியல் ஆய்வாளரும் சட்டத் தரணியுமான ஜோதிலிங்கம் யாழ்ப்பாணத்தில் இன்று இடம் பெற்ற ஊடகச் சந்திப்பின்போது தெரிவித்தார்.

13ஆம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான பேச்சுக்கள் தற்போது இடம்பெற்று வருகின்றன. 13 ஆம் திருத்தச் சட்டம் என்பது ஓர் அரசியல் தீர்வு அல்ல. அரசியல் தீர்வை பெறாமல் அவசியத்தை மேற்கொள்ள முடியாது, என்பதே தமிழ் மக்களின் தற்போதைய நிலைப்பாடு.

தற்போது உள்ள அரசியல் கட்சிகளைச் சேர்ந்தோர் தம்மால் இயலாத நிலையிலையே 13 ஆம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும், என்கிற நிலைக்கு வந்துள்ளார்கள். ஆனால், 13 ஆம் இலக்கச் சட்டம் என்பது இந்தியாவும் இலங்கையும் எடுத்துக்கொண்ட தீர்வே தவிர, அது தமிழ் மக்களுக்கான தீர்வு அல்ல. எனவே, 13 ஆம் திருத்தச் சட்டம் ஒருபோதும் தமிழ் மக்களுக்கான தீர்வாக அமையாது, என அவர் குறிப்பிட்டார்.

தேர்தல் நடத்துவதற்கு பணம் இல்லாத அரசாங்கம் எவ்வாறு குடிசன மதிப்பீட்டினை மேற்கொள்ளும்? இதற்கு அதிகளவிலான பணம் செலவாகப் போகிறது. எனவே, இவ்வாறான வேலைத் திட்டங்கள் இப்போது மக்களுக்குத் தேவைதானா? என்கிற கேள்வி எம்மிடையே எழுகிறது எனவும் அவர் தெரிவித்தார்.




## மக்கள் ஆணை எமக்கே உண்டு .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இடம்பெற்றது. இதன்போதே சம்பந்தன் இவ்வாறு குறிப்பிட்டார் என்று சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

"தமிழ் மக்களின் ஆணை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கு மாத்திரமே உள்ளது. நாம் மக்கள் ஆணையை மீறிச் செயற்பட முடியாது. 13ஆவது திருத்தச் சட்டத்தை மாத்திரம் முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு இந்தியாவைக் கோர முடியாது. தமிழ் மக்கள் அதற்கு ஆணை தரவில்லை. இந்தியாவே அதனைத் தாண்டி - கூட்டுறவு சமஷ்டி தொடர்பில் பிரஸ்தாபித்துள்ளது.

இவ்வாறிருக்கையில், 13ஆவது திருத்தத்தை மாத்திரம் முழுமையாக நடைமுறைப்படுத்துங்கள், என்று மக்கள் ஆணையுள்ள நாம் கோர முடியாது. ஏனைய கட்சிகள் எவ்வாறு வேண்டுமானாலும் செயற்படலாம். மக்கள் ஆணையுள்ள நாம் அவ்வாறு செயற்பட முடியாது! - என்று திட்டவட்டமாக சம்பந்தன் குறிப்பிட்டார் எனச் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

## முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
போராட்டக்காரர்கள் வலியுறுத்தல் விடுத்துள்ளனர்.

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைக் குழியிலிருந்து மீட்கப்பட்ட மனித எச்சங்கள், இறுதி யுத்தத்தின் போது சரணடைந்த நிலையில் காணாமல் ஆக்கப்பட்ட, தங்களின் உறவுகளுடையதாக இருக்கலாம் என போராட்டக்காரர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

கொக்குத்தொடுவாயில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைக்குழி அகழ்வுப் பணிகள் சர்வதேச நியமங்களுக்கு முரணாக இடம்பெற்று வருவதாகவும் எனவே, சர்வதேச நிபுணத்துவம் பெற்றவர்களை கொண்டு சர்வதேசத்தலையீட்டுடன் குறித்த அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு குறித்த எச்சங்கள் யாருடையவை என்பது தொடர்பாகக் கண்டறியப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக, வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தங்களுடைய உறவுகளைத் தேடிவருகின்ற நிலைமையில், குறித்த புதைகுழி தொடர்பில் சர்வதேசக் கண்காணிப்பில் நீதியான முன்மொழிவுகள் அவசியம் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த போராட்டத்தில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள் என பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## சந்திரிகாவை மீளவும் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்று கட்சி வட்டாரம் தெரிவிக்கின்றது.

மைத்திரியை 2015 ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்தவுக்கு எதிராக இறக்கி, மைத்திரியை ஜனாதிபதியாக்கியதில் பெரும் பங்கு சந்திரிக்காவுக்கு உண்டு. ஆனால், மக்கள் ஆணைக்கு மாறாக 2017 இல் மஹிந்தவை மைத்திரி பிரதமராக்கியதில் இருந்து சந்திரிக்காவுக்கு மைத்திரியுடன் மனக்கசப்பு ஏற்பட்டது.

2019 ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபயவுக்கு ஆதரவு வழங்குவதற்குச் சுதந்திரக் கட்சி முடிவெடுத்ததால் அந்த மனக்கசப்பு மேலும் வலுவடைந்தது. மைத்திரியை வெளிப்படையாகவே விமர்சிக்கத் தொடங்கினார் சந்திரிகா.

இருந்தும், சுதந்திரக் கட்சி வீழ்ந்து விட்டது. அதைக் கட்டியெழுப்புவதென்றால் சந்திரிகா கட்சியில் இருக்க வேண்டும், என்று கட்சியின் முக்கியஸ்தர்கள் இப்போது கருதுவதால் அவரை இணைப்பதற்கான நடவடிக்கையில் அவர்கள் இறங்கியுள்ளனர் என்று உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மண்டைதீவில் 60க்கும் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
காணப்படுவதாக தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

அதுமட்டுமன்றி, குறித்த பகுதியிலேயே வேலணை, அல்லைப்பிட்டி மற்றும் மண்கும்பான் பகுதிகளைச் சேர்ந்த 60க்கும் மேற்பட்ட இளைஞர்கள் படையினரால் அழைத்து வரப்பட்டு சுட்டுப் படுகொலை செய்யப்பட்டு, செம்பாட்டுத் தரையில் புதைக்கப்பட்டும், கத்தோலிக்க தேவாலயத்திற்கு முன்னால் உள்ள கிணற்றில் வீசப்பட்டுமுள்ளனர், எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## மண்டைதீவுக் கடற்படையினருக்குக் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
காலை 7.30 மணியளவில் ஒன்று கூடி, நகர்ந்து சென்று வெலிசுமன கடற்படை முகாம் முன்பாக எதிர்ப்பை வெளியிட்டனர்.

இதன்போது கடற்படை முகாமுக்கு முன்பாக பொலிஸார், கடற்படையினர் மற்றும் புலனாய்வாளர்கள் குவிக்கப்பட்டு இருந்தனர். கலகமடக்கும் கடற்படையினர் தயார் நிலையில் இருந்ததுடன் கடற்படையினர் போராட்டக்காரர்களை அச்சுறுத்தும் வகையில் புகைப்படங்கள் மற்றும் காணொளிகளை எடுத்துக் கொண்டிருந்தனர்.

போராட்டத்தின் நிறைவில் போராட்டகாரர்களுக்கு பிஸ்கட் குளிர்பானம் வழங்க வந்த கடற்படையினருக்கு பொது மக்கள் கோஷம் எழுப்பி கடும் எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

இதன்போது, "எங்கட காணியை விட்டு எழும்பிப் போங்கோ! நாம் பிஸ்கட் சாப்பிடுவோம்!, என கடற்படை அதிகாரியைப் பார்த்து காணி உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், முன்னாள் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், காணி உரிமையாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

காணி சுவீகரிப்புக்கு எதிராகப் போராட்டம் முன்னெடுக்கப்பட்ட போதும் நில அளவைத் திணைக்களத்தினர் அங்கு பிரசன்னமாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# தால முற்றம் - பனைசார் உற்பத்திப் பொருட்களின் கண்காட்சியும் விற்பனையும் சங்கிலியன் பூங்காவில்

ஆடிப்பிறப்பை முன்னிட்டு, வடக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களமும், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களும் இணைந்து நடாத்தும் தால முற்றம் - பனைசார் உற்பத்திப் பொருட்களின் கண்காட்சியும் விற்பனையும் வரும் 14 ஆம் திகதி முதல் 16 ஆம் திகவரை நல்லூர் சங்கிலியன் பூங்காவில் நடைபெறவுள்ளன.

முதலாம் நாள் ஆரம்ப நிகழ்வை யாழ் மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்கங்களின்பதிவாளருமாகிய திருமதி. தேவேந்தினி பாபு தலைமை தாங்கவுள்ளார். நிகழ்வின் சிறப்பு விருந்தினர்களாக, வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, மகளிர் விவகார மற்றும் கூட்டுறவு அமைச்சுக்கான வடமாகாண செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

## உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு சிப்தொற புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு





(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது பிரதேச செயலக பிரிவில் சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 22/24 ஆம் கல்வி ஆண்டில் உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் 68 மாணவர்களுக்கு, ஒவ்வொரு மாணவருக்கும் 4 மாதங்களுக்கு தலா 6000 ரூபா பெறுமதியான சிப்தொற புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு, சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.சி.ஏ.நஜீமின் நெறிப்படுத்தலில் பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எம்.எஸ்.சப்றாஸ், அதிதிகளாக சாய்ந்தமருது உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ.முவாஃபிகா, கணக்காளர் ஏ.ஜே. நுஸ்ரத் பானு, நிருவாக உத்தியோகத்தர் எம்.என்.எம்.றம்ஸான், நிருவாக கிராம உத்தியோகத்தர் எம்.எஸ்.நளீர், சமுர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர் றியாத் ஏ மஜீத், சமுர்த்தி வங்கி முகாமையாளர் ஐ.எல்.ஹிதாயா, பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எம்.எம்.சஊன், நிதி உதவியாளர் ஏ.சி. முஹம்மட், திட்டமிடல் பிரிவு பிரதான முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எம்.எஸ்.எம். றியாஸ், சமுர்த்தி சமூக பாதுகாப்பு விடய உத்தியோகத்தர் எல்.ஜி.எம்.ஜே.மரியம், சமுர்த்தி சமூக அபிவிருத்தி உதவியாளர் யூ.எல்.ஜபர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், மாணவர்கள், பெற்றோர் என பலர் கலந்து கொண்டனர் .

இதன்போது சாய்ந்தமருது பிரதேச தனவந்தர் ஒருவரினால் 68 மாணவர்களுக்கும் அப்பியாசக் கொப்பிகளும் வழங்கி வைக்கப்பட்டது.

## வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் 200ஆவது ஆண்டு நிறைவு சிறப்பு நிகழ்வுகள்

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் அதனது தாய்க் கல்வி நிறுவனமான பற்றிக்கோட்டா செமினரியினதும் 200ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பழைய மாணவர் ஒன்றுகூடல் வரும் ஜூலை 15 ஆம் திகதி முதல் 22 வரை இடம்பெறவுள்ளது. இது தொடர்பாக பழைய மாணவர் சங்க ஏற்பாட்டுக்குழு ஊடக அறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளது.

யாழ்ப்பாணக் கல்லூரியும் அதனது தாய்க் கல்வி நிறுவனமாகிய பற்றிக்கோட்டா செமினரியும் 1823 ஆம் ஆண்டு முதல் கடந்த 200 வருடங்களாக வழங்கிய கல்விப் பணியினையும், சமூகப் பணியினையும் நினைவுகொள்ளும் வகையிலும், கொண்டாடும் வகையிலும், அவை குறித்துச் சிந்திக்கும் வகையிலும், கல்லூரியின் எதிர்காலப் பயணம் குறித்துத் திட்டமிடும் வகையிலுமான பழைய மாணவர் வார நிகழ்வுகள் எதிர்வரும் ஜூலை 15 தொடக்கம் 22 வரை வட்டுக்கோட்டையில் இருக்கும் யாழ்ப்பாணக் கல்லூரி வளாகத்திலே மிகவும் கோலாகலமான முறையிலே இடம்பெறவுள்ளன.

உலகம் முழுவதிலும் இருந்து வரும் கல்லூரியின் பழைய மாணவர்கள் இந்த நிகழ்வுகளிலே பங்கேற்கவுள்ளனர்.

பழைய மாணவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட வாகனப் பவனி, நன்றி கூரல் ஆராதனை,பழைய மாணவர்கள் பங்கேற்கும் பல்வேறு விளையாட்டு நிகழ்வுகள் என்பனவும், மாணவர்களின் கலை, கலாசார நிகழ்வுகள், கல்லூரி மாணவர்களினால் உருவாக்கப்பட்ட "கல்லூரி வசந்தத்தில்" என்ற திரைப்படம் திரையிடல், கருத்துப் பகிர்வுகள், பொதுக் கூட்டம், பழைய மாணவர்கள் பங்கேற்கும் கலாசார நிகழ்வுகள், கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா ஆகியனவும் இடம்பெறவுள்ளன, என்று அந்த ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வீட்டில் மின்சாரம் தாக்கி பல்கலை மாணவி சாவு!

வீட்டில் மின்சாரம் தாக்கி இளம் யுவதி ஒருவர் சாவடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கம்பஹா - அத்தனகல்ல பிரதேசத்தில் இன்று அதிகாலை 5.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

களனிப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் 24 வயதுடைய எஸ்.ஆர். ருஷாங்கி என்ற மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த மாணவி ஆடைகளை அழுத்த மின்னழுத்தியைக் கையாண்டபோதே மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே சாவடைந்துள்ளார், என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,
ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்
பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்
5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

## சீனாவில் முதியோர்களைக் கவனிக்க மனித உருவ ரோபோ உருவாக்கம்!



தொழிநுட்ப வளர்ச்சி உலகம் முழுவதும் புதிய பாய்ச்சலை ஏற்படுத்தி வரும் நிலையில், சீனாவில் முதியோர்களைக் கவனித்துக்கொள்ளவென்று மனித உருவ ரோபோ ஒன்று வடிவமைக்கப்பட்டுள்ளது.

எங்கும் ரோபோ, எதிலும் ரோபோ என காலச்சூழல் மாறி வரும் நிலையில், சீனாவின் ஷாங்காயை தளமாக கொண்ட போரியர் இன்டெலிஜெண்ட்ஸ் என்று நிறுவனம், புதிய முயற்சியில் இறங்கியிருக்கிறது.

சீனாவில் 2035 ஆம் ஆண்டுக்குள் 60 வயதைக் கடந்தவர்களின் எண்ணிக்கை 2 கோடி 80 லட்சத்தில் இருந்து 40 கோடியாக உயரும் என்று சமீபத்தில் வெளியான மக்கள் தொகைக்கான புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

எனவே, அங்குள்ள வயதானவர்களைக் கவனித்துக்கொள்ளும் வகையில் இந்த மனித உருவ ரோபோ வடிவமைக்கப்பட்டுள்ளது. மருத்துவ சேவையை வழங்குவது, நோயாளிகளைப் படுக்கையில் இருந்து சக்கர நாற்காலிக்கு அழைத்துச் செல்வது, பொருட்களை எடுத்துக் கொடுப்பது போன்ற பணிகளை இந்த ரோபோ செய்து தரும் என்று தயாரிப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

தற்போது ஆராய்ச்சி நிலையில் இருக்கும் இந்த ரோபோ அடுத்த 3 ஆண்டுகளுக்குள் பயன்பாட்டுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



## தேர்தல் தோல்வியால் அரசியலிலிருந்து விலகுவதாக தாய்லாந்துப் பிரதமர் தகவல்

தாய்லாந்தில் கடந்த 2014 ஆம் ஆண்டு இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியதில் இருந்து பிரதமராக இருந்தவர் பிரயுத் சான் ஓச்சா. இவர் கடந்த மே மாதம் நடந்த தேர்தலில் மீண்டும் பிரதமர் வேட்பாளராகப் போட்டியிட்டிருந்தார். ஆனால், இவரது கட்சி வெறும் 36 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றிருந்தது.

இந்த நிலையில், அரசியல் இருந்து தான் விலகுவதாக அவர் அறிவித்துள்ளார்.

யுனைடட் தாய் நேஷன் கட்சி உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்வதன்மூலமாக நான் அரசியலில் இருந்து ஓய்வு பெறுவதை அறிவிக்க விரும்புகிறேன், என்று இது குறித்து அவர் தனது பேஸ்புக் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தாய்லாந்து நாடாளுமன்றம் நாளை புதிய பிரதமரைத் தெரிவு செய்யவுள்ள நிலையில், அரசிய லில் இருந்து விலகுவதாக முன்னாள் பிரதமர் பிரயுத் அறிவித்துள்மை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# மெக்சிகோவில் வெடிகுண்டுத் தாக்குதல் காவல் துறை உயரதிகாரிகள் மூவர் பலி



மெக்சிகோவின் மேற்கே ஜலிஸ்கோ மாகாணத்தில் உள்ள நகர காவல்துறை மற்றும் வழக்கறிஞர்கள் அலுவலகம் மீது திடீரென வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தில் காவல் துறையை சேர்ந்த அதிகாரிகள் மூவர் பலியாகியுள்ளனர். பத்துப்பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்றிரவு நடந்த இந்தத் தாக்குதல் சம்பவம் பற்றி மாகாண ஆளுநர் என்ரிக் அல்பேரா தனது டுவிட்டரில் உறுதிப்படுத்தியுள்ளார்.

இது ஒரு கோழைத்தனமான தாக்குதல் எனக் குறிப்பிட்டுள்ள அவர், மெக்சிகன் மாகாணம் முழுமைக்கும் ஒரு சவாலாக இது அமைந்து உள்ளது. விசாரணை நடந்து வருகிறது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட் கிழமை மத்திய மெக்சிகன் நகரான டொலுகா நகரில் உள்ள சந்தை ஒன்றில், முகமூடி அணிந்த மர்ம நபர்கள் நடத்தியிருந்த கொடூரத் தாக்குதலில் 9 பேர் உயிரிழந்திருந்தனர். அந்தச் சம்பவ அதிர்ச்சியிலிருந்து மெக்சிகோ மக்கள் மீளும் முன்பாக வெடிகுண்டுத் தாக்குதல் நிகழ்த்தப்பட்டுள்ளது.

# உக்ரைனின் எதிர்காலம் நேட்டோவின் கையில் உலக நாடுகளின் தலைவர்கள் உறுதியளிப்பு!




ஐரோப்பிய நாடான லிதுவேனியாவில் உள்ள வில்னியஸ் நகரில் நேட்டோ அமைப்பு நாடுகளின் இரு நாள் உச்சி மாநாடு நடைபெற்றது. இதில், உக்ரைன் விவகாரம் முக்கியத்துவம் பெற்றிருந்தது.

மாநாட்டின் பின்னர் அது தொடர்பாக வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில், உக்ரைனின் எதிர்காலம் நேட்டோ அணிக்குள்தான் உள்ளது. அணியில் உள்ள நாடுகளின் நிபந்தனைகளை ஒப்புக்கொண்டு, அது நிறைவேற்றப் படும்போது உக்ரைனை அணியில் சேருவதற்கான அழைப்பு விடுக்கப்படும், என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், எம்மாதிரியான நிபந்தனை என்று அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை.

மேலும், நேட்டோ அமைப்பில் உள்ள நாடுகளின் பாதுகாப்புக்கு சீனா ஒரு சவாலாக உள்ளது. ரஷ்யாவும், சீனாவும் சர்வதே ஒழுங்கைக் குறைக்கும் முயற்சிகளில் ஈடுபடுகின்றன. உக்ரைனில் அமைதியை விரும்புவதாக சீனா கூறியுள்ளது. ஆனால், 2022 பெப்ரவரியில் தொடங்கிய ரஷ்யாவின் படையெடுப்பைச் சீனா இதுவரை கண்டிக்கவில்லை.

எங்கள் அணியில் புதிய உறுப்பினராக இணைந்துள்ள பின்லாந்தை நாங்கள் வரவேற்கிறோம். இது பின்லாந்துக்கும், நேட்டோவுக்கும் ஒரு வரலாற்று நிகழ்வாகும். பல ஆண்டுகளாக, நாம் நட்பு நாடுகளாக நெருக்கமாகப் பணியாற்றினோம். ஆனால், இப்போது நெருங்கிய நட்பு நாடுகளாக மாறி இருக்கிறோம். இந்த இணைவு பின்லாந்தை பாதுகாப்பானதாகவும், நேட்டோவை வலுவானதாகவும் மாற்றியிருக்கிறது.

உக்ரைன் மீது நியாயமற்ற சட்ட விரோத நடவடிக்கையில் ஈடுபட்டதற்கு ரஷ்யா முழுப் பொறுப்பேற்க வேண்டும். ரஷ்யா சர்வதேச விதிகளை மீறுவதைக் கடுமையாகக் கண்டிக்கிறோம், என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கடந்த 15 ஆண்டுகளில் 41.5 கோடி இந்தியர்கள் வறுமையிலிருந்து மீண்டதாக ஐ.நா. அறிக்கை

ஐ.நா. மேம்பாட்டுத் திட்ட அமைப்பு, உலகளாவிய பல் பரிமாண வறுமைக் குறியீட்டை வெளியிட்டுள்ளது. கடந்த 15 ஆண்டுகளில் உலக அளவில் 25 நாடுகள் பல் பரிமாண வறுமையைப் பாதியாகக் குறைத்துள்ளன, என்று அந்த அறிக்கையில் ஐ.நா. தெரிவித்துள்ளது.

சுகாதாரம், கல்வி, வாழ்க்கைத் தரம் ஆகியவற்றின் அடிப்படையில் பல்பரிமாண வறுமை கணக்கிடப்படுகிறது.

2000 முதல் 2022 வரையிலான காலகட்டத்தில் 81 நாடுகளில் நிகழ்ந்த மாற்றங்களை ஐ.நா. மேம்பாட்டுத் திட்ட அமைப்பும் ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகமும் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டன.

அந்த ஆய்வில், கடந்த 15 ஆண்டுகளில் 25 நாடுகள் தங்கள் நாட்டில் நிலவிய பல் பரிமாண வறுமையைப் பாதியாகக் குறைத்துள்ளன என்பது கண்டறியப்பட்டுள்ளது. குறிப்பாக இந்தியாவில், 2006 முதல் 2021 வரையிலான 15 ஆண்டு காலகட்டத்தில் 41.5 கோடி பேர் பல் பரிமாண வறுமையிலிருந்து விடுபட்டுள்ளனர்.

இது குறிப்பிடத்தக்க அளவிலான மேம்பாடு, என்று அந்த ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வடகொரியா அரசு மீண்டும் ஏவுகணைச் சோதனை ஜப்பான் கடல் பகுதியில் அது விழுந்ததால் பரபரப்பு



கொரிய தீபகற்பப் பகுதியில் தென் கொரியாவின், அமெரிக்கப் படைகளுடனான போர் ஒத்திகைக்குக் கண்டனம் தெரிவிக்கும் விதமாக வடகொரியா ஏவுகணைச் சோதனையை நடத்தியிருக்கிறது.

தென்கொரியா, ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகளின் எதிர்ப்பையும் மீறி, வடகொரியா அடிக்கடி ஏவுகணைச் சோதனையை நடத்தி வருகிறது. இதற்குப் பதிலடி அளிக்கும் வகையில் அமெரிக்க, தென்கொரிய இராணுவங்கள் ஒன்றிணைந்து போர்ப் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றன. இதனால் கொரிய தீபகற்பத்தில் தொடர்ந்து பதற்றம் நிலவி வருகிறது.

இந்த நிலையில், தங்களது வான்வெளிக்குள் அமெரிக்க உளவு விமானம் அத்துமீறி நுழைந்ததாக அண்மையில் வடகொரியா குற்றஞ்சாட்டியிருந்தது. தமது வான்வெளிக்குள் நுழையும் அமெரிக்க விமானங்கள் சுட்டு வீழ்த்தப்படும், என்று வடகொரிய அதிபர் கிம் ஜாங் உன்னின் சகோதரி கிம் யோ ஜாங் எச்சரித்திருந்தது பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

இந்த நிலையில், கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணையை வடகொரியா சோதனை செய்துள்ளது. இந்த ஏவுகணை தங்கள் கடல் எல்லைக்குள் விழுந்ததாகக் கூறியுள்ள ஜப்பான், இந்த நடவடிக்கைக்கு வடகொரியாவுக்கு கடும் கண்டனத்தையும் தெரிவித்துள்ளது.

நேட்டோ உச்சி மாநாட்டில் கலந்துகொள்வதற்காக லிதுவேனியா சென்றுள்ள ஜப்பான் பிரதமர், தென் கொரியா, அவுஸ்திரேலியா மற்றும் நியுசிலாந்து ஆகிய நாடுகளுடன் இது தொடர்பாகப் பேசத் திட்டமிட்டுள்ளதாகவும் ஜப்பான் கூறியுள்ளது.

கொரிய தீபகற்பத்தில் ஜப்பான் கடல் பகுதியில், அணுவாயுதம் தாங்கிய போர்க் கப்பலை நிறுத்த அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. இந்தச் சூழலில் வடகொரியா நடத்தியிருக்கும் ஏவுகணைச் சோதனை கொரிய தீபகற்பத்தில் நிலவும் பதற்றத்தை பன்மடங்கு அதிகரித்துள்ளது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.07.2023இல் வெளியிடப்பெற்றது.